IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 67/2021

Deposition of Witness : PW 1

Name : பாலு (வயது – 57)

Father's Name /W/o : த/பெ துரைகண்ணன்

Calling : –

Address : மூதூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 30.06.2026.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்து சக்கலிகுப்பன், நாகி, பி.சி.கான், வீரராகவன் மற்றும் வெங்கட்டிகான் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 5 பேரில் ரிசெட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 50 வருடங்களுக்கு முன்பு நடந்தது எனக்கு தெரியாது. மேற்படி 5 பேரில் வெங்கட்டிகான் என்பவரிடமிருந்து 02.08.1976 அன்று 3 சென்ட் என் தந்தை வாங்கினார் என்றால் சரிதான். எனவே என் தந்தைக்கு தாவா சொத்தில் 3 சென்ட்க்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. என் தந்தைக்கு 15 சென்ட் சொந்தம். எனவே என் தந்தைக்கு அவர் வாங்கிய 3 சென்ட் தவிர்த்து மற்ற சொத்திற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை என் பெயருக்கு எவ்வளவு அளவு சொத்து எழுதி வைத்துள்ளார் என்றால் 15 சென்ட் எழுதி வைத்துள்ளார். என் தந்தை வாங்கிய 3 சென்ட் தவிர்த்து மீதமுள்ள 12 சென்ட்க்கு எழுதி வைத்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. எனவே எனக்கும் 3 சென்ட் தவிர்த்து மீதமுள்ள 12 சென்ட் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. குப்பன் மற்றும் பி.சி.கான் வகையறாவிடமிருந்து பிரதிவாதிகள் 6 முதல் 9 ஆகியோரின் தாத்தா முனுசாமி என்பவர் 23.12.1966

2. அன்று ஆவணம் எண்.4119/1966 முன்னிலைக்கு கிழக்கு மேற்கு 12 அடி வடக்கு தெற்கு 70 அடி தாவா சொத்திலிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் பெற்றதிலிருந்து முனுசாமி என்பவர் தாவா சொத்தில் அனுபவித்தில் இருந்தார் என்றால் சரியல்ல. முனுசாமி என்பவர் 02.09.2003 அன்று இறந்துவிட்டார் என்றால் தெரியாது. முனுசாமி இறப்பிற்கு பிறகு அவரின் வாரிசுகளான 6 முதல் 9 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. நான் தான் பயிர் வைத்து வருகிறேன்.

3. என் தந்தை எழுதி வைத்த ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்தில் சர்வே எண்.361/2 இல் 12 சென்ட் நிலத்தை அவர் பதிவு செய்யப்படாத கிரையப் பத்திரத்தில் எழுதி கொடுத்துள்ளார் என்று தெரிவித்துள்ளார் என்றால் தவறு. மேற்படி விபரத்தை நான் என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. 12 சென்ட் நான் வாச்சாவாக பெற்றுள்ளேன் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ – 2,3,4 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ – 5 21.02.2023 அன்று தான் பெற்றுள்ளேன் என்றாலும் எனவே வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 3 சென்ட் மட்டும் தான் எனக்கு உரிமை உள்ளது என்றாலும் எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.